# அரசர்கள் இல்லாத அலங்கோலமான இஸ்ரவேல்

## நியாயாதிபதிகளின் புத்தகம் எம்.எஸ்.வசந்தகுமார்

யோசுவாவினுடைய மரணத்திற்கும் (கி.மு.1350) சவுல் இஸ்ரவேலின் அரசனாகுவதற்கும் (கி.மு.1050) இடைப்பட்ட காலமே நியாயாதிபதிகளின் காலமாகும். "அந்நாட்களில் இஸ்ரவேலில் ராஜா இல்லை" என்னும் குறிப்பு (17:6, 18:1, 19:1, 21:25) இதை அறியத்தருகின்றது. "நியாயாதிபதி" என்பதற்கு மூலமொழியில் உபயோகிக்கப்பட்டுள்ள "ஷாப்ஹாட்" (*shaphat*) என்னும் எபிரேயச் சொல் நீதிபதி, சட்டவல்லுணன், ஆளுநர், அரசன் என்னும் பல அர்த்தங்களைக்கொண்டுள்ளபோதிலும், நியாயாதிபதிகளாக இஸ்ரவேலில் செயற்பட்டவர்கள் இராணுவத் தலைவர்களாகவும் இருந்துள்ளனர். இஸ்ரவேலில் அரச ஆட்சி ஏற்படும் வரை, மக்களை ஆட்சி செய்கிறவர்களாக நியாயாதிபதிகள் இருந்துள்ளனர். எனினும் இவர்களுடைய பிரதான பணி தேவனுடைய சிறப்பான வல்லமையினால் செயற்படும் தலைவர்களாக இருந்து, மக்களை எதிரிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிப்பதாகவே இருந்தது.

நியாயாதிபதிகளின் காலம், இஸ்ரவேல் மக்களை வழிநடத்துவதற்கு ஒரு தலைவன் இல்லாத காலமாக இருந்ததினால் மனிதர்கள் தத்தமது விருப்பு வெறுப்புகளின்படி வாழ்ந்து வந்தனர். மோசேயினால் வழிநடத்தப்பட்ட மக்கள் யோசுவாவின் தலைமையில் வெற்றியாளர்களாக கானான் தேசத்தைக் கைப்பற்றினார்கள். ஆனால் இப்போது அவர்கள் தலைவனில்லாத மக்களாக எதிரிகளினால் ஆக்கிரமிக்கப்பட்டனர். எனினும், இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தை மீறி நடந்ததே அவர்களுடைய ஆசீர்வாதமற்ற நிலைமைக்கான காரணமாக இருந்தது. மேலும், யோசுவாவின் காலத்தில் இஸ்ரவேல் மக்கள் கானான் தேசத்தை முழுமையாகக் கைப்பற்றவில்லை (யோசு.13:1). அவர்கள் கைப்பற்றிய பிரதேசங்களிலும் கானானியரை முழுமையாக மேற்கொள்ளவில்லை. மக்கள் தேவனுடைய கட்டளைக்கு விரோதமாக கானானியருடைய பழக்கவழக்கங்களைக் கைக்கொண்டதோடு கானானிய தெய்வங்களையும் வழிபட்டு வந்தனர். இதனால் அவர்கள் வேறு ஜாதியினரால் ஆக்கிரமிக்கப்பட்டனர். எனினும், அவர்கள் தேவனிடம் முறையிட்ட காலங்களில் சிறப்பான ஒரு தலைவன் மூலம் தேவன் அவர்களை விடுவித்து வந்தார். இஸ்ரவேலில் சவுல் அரசனாகும் வரை இத்தகைய நிலைமையே காணப்பட்டது.

நியாயாதிபதிகளின் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சில விஷயங்கள், இஸ்ரவேலில் அரச ஆட்சி ஏற்பட்ட பின்னர் இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளதை அறியத்தருகின்றது. "அந்நாட்களில் இஸ்ரவேலில் ராஜா இல்லை" என்னும் குறிப்பு (17:6, 18:1, 19:1, 21:25) அரச ஆட்சி ஏற்பட்ட பின்னர், அதற்கு முற்பட்ட காலத்தை வர்ணிக்கும் விதத்தில் உள்ளது. நியாயாதிபதிகளின் காலம் முடிவடைந்து அரச ஆட்சி ஏற்பட்ட பின்பே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளதற்கான ஆதாரமாக இது உள்ளது. எனினும் புத்தகத்தின் சில குறிப்புகள் எழுதப்பட்ட காலத்தை வரையறை செய்கின்றன. போனீசிய நகரங்களில் தீருவின் பெயர் குறிப்பிடப்படாமல் சீதோனுடைய பெயர் மட்டும் 3:3ல் இருப்பதனால், இவ்விரு பட்டணங்களிலும் தீரு கி.மு.12ம் நூற்றாண்டில் முக்கியமானதாக வருவதற்கும் முன்பே இப்புத்தகம் எழுதப்பட்டிருக்க வேண்டும். இதைப்போல, புத்தகம் எழுதப்பட்ட காலத்தில் கேசேரில் கானானியர் குடியிருந்ததாகவும் 1:29ல் குறிப்பிடப்பட்டுள்ளது. சாலொமோனுடைய காலத்திலேயே எகிப்தியர் இவ்விடத்திலுள்ள கானானியரை அழித்து இப்பட்டணத்தை சாலொமோனுக்கு கொடுத்தனர் (1ராஜா.9:16). மேலும், எபூசியர் இந்நாள் மட்டும் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டிருப்பதனால் (1:21), தாவீது எருசலேமை கைப்பற்றுவதற்கும் முன்பே (2சாமு.5:6-7), குறிப்பாக சவுலினுடைய ஆட்சிகாலத்தில் இப்புத்தகம் எழுதப்பட்டிருக்க வேண்டும். யூதர்களுடைய பாரம்பரியக் குறிப்புகளின்படி இப்புத்தகம் சாமுவேலினால் எழுதப்பட்டுள்ளது.

நியாயாதிபதிகளின் புத்தகத்தை மூன்று பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல் பகுதியில் நியாயாதிபதிகளின் காலத்தில் இருந்த குழப்பங்களுக்கான காரணம் விளக்கப்பட்டுள்ளது (1:1-3:6). இரண்டாம் பகுதியில் அக்காலத்தில் தேவனால் எழுப்பப்பட்ட நியாயாதிபதிகளைப்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது (3:7-16:31). மூன்றாம் பகுதியில் அக்கால மக்களுடைய நிலைமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது (17:1-21:25).


©. M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, November, 2006.

## 1. குழப்பமான நிலைமைக்கான காரணங்கள் (1:1-3:6)

1:1-36. யோசுவாவின் மரணத்தின் பின் இஸ்ரவேல் மக்கள் கானானில் கைப்பற்ற வேண்டிய பிரதேசங்களை ஆக்கிரமிக்க முற்பட்டாலும், அவர்கள் தேவனுடைய கட்டளையின்படி கானானை முழுமையாகக் கைப்பற்றவில்லை. இதுவே நாட்டின் குழப்பமான நிலைமைக்கான காரணம் என்பது இப்பகுதியில் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

2:1-5. இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய கட்டளைக்கு முழுமையாகக் கீழ்ப்படியாததி னால், தேவன் அவர்கள் மீது அதிருப்தியடைந்தார். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் மனிதருடைய கண்களுக்குத் தென்படக்கூடிய விதத்தில் தேவன் தரிசனம் கொடுத்த சந்தர்ப்பங்களில் அவர் கர்த்தருடைய தூதனானவர் என்று அழைக்கப்பட்டுள்ளார் (2:1,4).

2:6-3:6. இஸ்ரவேல் மக்கள் கானானியத் தெய்வங்களை வழிபட்டதோடு, கானானியரு டன் திருமண உறவுகளையும் ஏற்படுத்திக் கொண்டனர். “பாகால்” என்பது கானானிய மக்களுடைய ஆண் தெய்வம். இத்தெய்வத்தின் மனைவியே “அஸ்தரோத்” (3:13). சில இடங்களில் இத்தெய்வம் “அசேரா” என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2. தேவனால் எழுப்பப்பட்ட நியாயாதிபதிகள் (3:7-16:31)

இஸ்ரவேல் மக்கள் தேவனுடைய கட்டளையை மீறிப் பாவம் செய்த போது, அவர்கள் அருகிலிருக்கும் ஜாதியினரால் ஆக்கிரமிக்கப்பட்டனர். அவர்கள் தேவனை நோக்கி கூப்பிட்டபோது, தேவன் அவர்களுக்கு ஒரு நியாயாதிபதியைக் கொடுத்து அவர்களை விடுவித்தார். அதன்பின்னர் குறிப்பிட்ட காலம் நாட்டில் சமாதானம் நிலவியது. ஆனால் மறுபடியும் மக்கள் பாவம் செய்து பிற ஜாதிகளினால் ஆக்கிரமிக்கப்பட்டு துன்பப்படும் காலத்தில் தேவனை நோக்கி மன்றாட, அவரும் இன்னுமொரு நியாயாதிபதியின் மூலம் மக்களை விடுவித்தார். இவ்வாறு தேவனால் உபயோகிக்கப்பட்ட 12 நியாயாதிபதிகளைப் பற்றி இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. இவர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பணியாற்றியவர்கள் அல்ல. மேலும், ஒரு நியாயாதிபதி முழு இஸ்ரவேலுக்கும் அல்ல, எப்பகுதியில் உள்ள மக்கள் பிற ஜாதியினரால் ஆக்கிரமிக்கப்பட்டனரோ, அப்பகுதியில் மட்டுமே நியாயாதிபதியாகப் பணியாற்றியுள் ளனர். இதனால் ஒரே நேரத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட நியாயாதிபதிகள் வெவ்வேறு இடங்களில் பணியாற்றியுள்ளனர்.

“கர்த்தர் இஸ்ரவேல் மக்களை வேறு ஜாதியினரிடம் விற்றுப்போட்டார்” என்னும் சொற்பிரயோகம் (2:14, 3:8, 4:2, 10:7), தேவன் முழுமையாக அவர்களை வேறு ஜாதியினரிடம் ஒப்புக்கொடுத்துள்ளதை அறியத்தருகின்றது. இது அவர்களுடைய பாவத்திற்கான தேவனுடைய தண்டனையாக உள்ளது.

3:7-11. எட்டு வருஷங்கள் இஸ்ரவேல் மக்கள் மொசப்பத்தேமிய அரசனுடைய ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்தனர். அக்காலத்தில் ஒத்னியேல் மூலமாகத் தேவன் இஸ்ரவேல் மக்களை விடுவித்தார். அதன்பின்னர் 40 வருஷங்கள் நாட்டில் சமாதானம் நிலவியது. ஒத்னியேலுக்கும் காலேபுக்கும் இடையிலான உறவுமுறை எத்தகையது என்பது பற்றி நிச்சயமாகக் கூறமுடியாதுள்ளது. “காலேபுடைய தம்பியாகிய கேனாசின் குமாரன் ஒத்னியேல்” என்பது பெரும்பாலான வேதாகமங்களில் திருவிவிலியத்தில் உள்ளதுபோல “காலேபின் இளைய சகோதரனும், கேனாசின் குமாரனுமாகிய ஒத்னியேல்” என்றே உள்ளது.

நியாயாதிபதிகளின் புத்தகத்தில் கர்த்தருடைய ஆவியானவர் மனிதர்கள் மீது வருவதைப்பற்றிய பல குறிப்புகள் உள்ளன (3:10, 6:34, 11:29, 13:25, 14:6, 14:19, 15:14). இது வித்தியாசமான முறைகளிலும் குறிப்பிடப்பட்டுள்ளது (14:4, 13:25, 14:6, 14:19). அக்காலத்தில் ஒரு குறிப்பிட்ட பணியைச் செய்வதற்காக ஆவியானவர் மக்களுக்கு அருளப்பட்டுள்ளதை இக்குறிப்புகள் அறியத்தருகின்றன. இதனால், அக்குறிப்பிட்ட பணி முடிவடைந்தவுடன் ஆவியானவர் அந்நபர்களைவிட்டுச் சென்று விடுவது வழக்கம். தேவனை அறியாத மனிதனும் இத்தகைய அனுபவத்துக்கு உட்பட்டுள்ளதை எண்ணாகமம் 24:2ல் நாம் காணலாம். மறுபுறத்தில் அரச, ஆசாரிய,


©. M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, November, 2006.

தீர்க்கதரிசனப் பணிகளிலும், பதவிகளிலும் இருந்தவர்களில் அவர்கள் குறிப்பிட்ட பதவியில் அல்லது பணியில் இருக்கும் காலம் வரை ஆவியானவர் அவர்களில் வாசமாயிருந்தார். இதனால்தான், தேவன் சவுலை அரச பதவியிலிருந்து அகற்றிய பின்னர் ஆவியானவர் அவனிலிருந்து சென்றுவிட்டார் (1சாமு.16:14). தாவீது அரசனாக நியமிக்கப்பட்ட காலத்திலிருந்து ஆவியானவர் அவனில் இருந்தார் (1சாமு.16:13, சங்.51:11). மேலும், நியாயாதிபதிகளில் யுத்தத்தில் வெற்றியைக் கொடுப்பதற்காகவே ஆவியானவர் அருளப்பட்டுள்ளார். ஆனால் புதிய ஏற்பாட்டுக்காலத்தில் ஆவியானவரின் செயல் சற்று வித்தியாசமானதாக உள்ளது. பழைய ஏற்பாட்டுக் காலத்தைப்போல குறிப்பிட்ட சிலருக்கு மட்டுமல்ல, சகலருக்கும் ஆவியானவர் அருளப்படுகின்றார் (யோவே. 2:28, அப்.2:16-17) மேலும், குறிப்பிட்ட பணியைச் செய்கின்ற காலத்தில் மட்டுமல்ல, நிரந்தரமாக மனிதருக்குள் வாசமாயிருக்கின்றார் (யோவா.14:16, எபே.4:30, எசே.36:27, 37:5-6, 37:14).

3:12-31. மறுபடியும் மக்கள் பாவம் செய்தபோது, மோவாபிய அரசன், அம்மோன் அமலேக் என்னும் ஜாதியினருடன் சேர்ந்து இஸ்ரவேலைத் தாக்கினான். மக்கள் மனந்திரும்பியபோது ஏகூத் என்பவன் மூலம் தேவன் அவர்களை விடுவித்தார். அதன்பின்னர் என்பது வருஷங்களுக்கு நாட்டில் சமாதானம் நிலவியது.

4:1-5:31. ஏகூத்தின் மரணத்தின் பின்னர் மக்கள் மறுபடியும் பாவம் செய்தார்கள். ஆத்சோரில் ஆளுகிற கானானின் அரசன் இஸ்ரவேல் மக்களை ஆக்கிரமித்தான். இருபது வருஷங்கள் இஸ்ரவேல் மக்கள் பாதிக்கப்பட்டனர். ஆத்சோர் இஸ்ரவேலின் வடபகுதியில் இருந்தது. அக்காலத்தில் தெபோரள் தீர்க்கதரிசியாக இருந்ததினால், தேவன் அவளை நியாயாதிபதியாக ஏற்படுத்தினார் (4:4). இவள் பாராக் என்பவனின் உதவியுடன் கானானியருடைய ஆக்கிரமிப்பை மேற்கொண்டாள். 5ம் அதிகாரம் வெற்றியின் பின்னர் அவர்கள் பாடிய பாடலாக உள்ளது.

6:1-8:32. தென் கிழக்குப்பகுதியிலிருந்து மீதியானியர் ஏழு வருஷங்கள் இஸ்ரவேலை ஆக்கிரமித்தனர். மீதியானியர் அபிரகாமுக்கும் கேத்தூராள் என்னும் பெண்ணுக்கும் பிறந்த பிள்ளைகளில் ஒருவனுடைய சந்ததியினராவர் (ஆதி.25:1-2). மீதியானியருடைய ஆக்கிரமிப்பில் உபாகமம் 28:43ன்படி நடந்துள்ளதை நாம் கானலாம். மேலும். தேவன் இஸ்ரவேல் மக்களை விடுவிப்பதற்கு முன்னர், ஒரு தீர்க்கதரிசியின் மூலம் தம்முடைய வாக்குத்தத்தத்திற்குத் தாம் உண்மையுள்ளவராக இருந்துள்ளதையும், மக்கள் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்ளாததும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (6:7-10). மக்கள் மனந்திரும்பிய போது தேவன் கிதியோன் என்பவன் மூலம் இஸ்ரவேலரை விடுவித்தார். “அபியேஸ்ரியன்” (6:11) என்பது, மனாசே கோத்திரத்தின் ஒரு குடும்பமாக இருந்தது (யோசு.17:2). தேவனே கர்த்தருடைய தூதனானவராகத் தரிசனம் கொடுத்துள்ளார் என்பதை அறிந்துகொண்ட கிதியோன், தான் மரிப்பது நிச்சயம் என்று எண்ணினாலும், அப்படி நடக்காது என்று தேவன் அவனுக்கு உறுதிப்படுத்தினார் (6:22-23). யாத்.33:20, 20:19, நியாயா.13:22,ஏசா.6:5.

ஏனைய நியாயாதிபதிகளைவிட கிதியோனுக்கு இப்புத்தகத்தில் அதிகளவு இடம் கொடுக்கப்பட்டுள்து. இதுவரையில் இஸ்ரவேல் மக்களை விடுவிக்க தேவன் ஒரு நியாயாதிபதியை எழுப்பினார் (2:16, 3:9) என்னும் குறிப்புக்குப் பதிலாக இங்கு கிதியோனைத் தேவன் எவ்வாறு நியாயாதிபதியாக்கினார் என்பது விபரமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. கிதியோன் பராக்கிரமசாலி என்று அழைக்கப்பட்டுள்ளபோதிலும், பயந்த சுபாவமுள்ளவனாகவே இருந்தான். திராட்சை ஆலையில் அவன் கோதுமையை போரடித்ததற்கு மீதியானியர் மீது அவனுக்கு இருந்த பயமே காரணமாகும் (6:11ன் தெளிவான மொழிபெயர்ப்பிற்கு ஆங்கில வேதத்தை அல்லது புதிய தமிழ் மொழி பெயர்ப்புகளைப் பார்க்கவும்). தேவனிடம் அவன் அடையாளங்களைக் கேட்டதும் அவனுடைய பயந்த சுபாவத்திற்கான காரணமாகவே உள்ளது (6:17, 6:36-40). தேவனுடைய கட்டளையை நிறைவேற்றும்போது அவன் இஸ்ரவேல் மக்களுக்கும் பயப்பட்டதை 6:27 சுட்டிக்காட்டுகிறது. கர்த்தருடைய தூதனானவர் கிதியோனைப் பராக்கிரமசாலி என்று கூறியதைச் சிலர் தீர்க்கதரிசனக் கூற்றாகவும், சிலர் முகஸ்துதிக்காகச் சொன்ன வார்த்தையாகவும் கருதுகின்றனர். பயந்தசுபாவமுடைய வனை எப்படி இவ்வாறு கூறமுடியும் என்பதே இவர்களின் கேள்வியாக உள்ளது. ஆனால் தெய்வீக வல்லமை காரணமாக கிதியோன் எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதைக் கருத்திற்கொண்ட கூற்றாகவே இது உள்ளது. இவ்விதமாகவே இயேசு கிறிஸ்து பேதுருவைப்பற்றியும் கூறினார் (யோவா.1:42). அதாவது அவன் எப்படிப்பட்டவ


©. M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, November, 2006.

னாக இருக்கின்றான் என்பதை அல்ல, எப்படிப்பட்டவனாக இருப்பான் என்பதைப்பற்றிய கூற்றாக உள்ளது

மோசேயைத் தேவன் அழைத்தபோது அவன் எவ்வாறு தயக்கமுள்ளவனாக இருந்தானோ அவ்விதமாகவே கிதியோனும் இருந்தான். மனாசேயில் என் குடும்பம் எளியது என்னும் அவனுடைய கூற்றில், "எளியது" என்பது திருவிவிலியத்தில் "நலிவுற்று இருப்பது" என்று உள்ளது. இது இராணுவரீதியான நலிவையே குறிக்கிக்கின்றது. தகப்பன் வீட்டில் நான் எல்லோரிலும் சிறியவன் என்பது, குடும்பத்தில் கடைசி பிள்ளையாக இருப்பதைக் குறிக்கின்றது. கிதியோன் பயந்த சுபாவமுள்ளவனாகவும், தன்னைப்பற்றிய தாழ்வு மனப்பான்மையுடனும் இருந்த போதிலும், தேவன் அவனை தைரியப்படுத்தினார். கிதியோனோடு இருப்பதாக வாக்களித்தார். கர்த்தர் அவனோடு இருப்பதனால் (6:16), அவன் தனக்கு இருக்கின்ற பலத்தோடு மீதியானியருக்கு எதிராக யுத்தம்செய்யும்படி அனுப்பப்பட்டான் அத்தோடு பரிசுத்த ஆவியும் அவனுக்கு அருளப்பட்டார் (6:34).

இஸ்ரவேல் மக்கள் கானானியத் தெய்வத்தை வழிபட்டதே மீதியானியரின் ஆக்கிரமிப்புக்குக் காரணமாக இருந்ததினால். அவ்வழிபாட்டிலிருந்து பிரித்துக் கொள்வதற்காக அத்தெய்வ வழிபாட்டிடத்தை அழிக்கும்படி தேவன் கிதியோனிடம் கூறினார். மக்களுடைய எதிர்ப்புக்கு மத்தியிலும் அவன் இதைச் செய்ய வேண்டியவனாக இருந்தான் (6:25-33). கர்த்தருடைய கட்டளையை நிறைவேற்றும் போது மக்களுடைய எதிர்ப்புகள் ஏற்படுவது இயற்கை என்பதை இச்சம்பவம் அறியத் தருகின்றது. 31ம் 32ம் வசனங்கள் பாகால் வழிபாட்டாளர்களை எலியா பரிகசித்ததைப் போலவே உள்ளது.

கிதியோன் அடையாளம் கேட்டது அவனது பயந்த சுபாவத்தையும் விசுவாசக் குறைவையுமே காண்பிக்கின்றது. தேவன் உண்மையிலேயே மீதியானியரை மேற்கொள் வதற்காகத் தன்னைத் தெரிவு செய்துள்ளாரா என்னும் சந்தேகம் அவனுக்கு ஏற்பட்டதினால், ஆவியானவர் அருளப்பட்டு, மக்கள் அவனுக்குச் செவிகொடுத்து அவனுக்கு உதவியாக வந்தபின்பும் அடையாளம் கேட்டுள்ளான் (6:34-40). எனினும் இது தேவனைப் பரீட்சை பார்க்கும் செயலாக அல்ல (யாத்.17:2, 17:7, உபா.6:16, சங்.95:9) தேவனுடைய அழைப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான செயலாகவே உள்ளது. உண்மையில், பலவீனமும் அவிசுவாசமுமே மனிதர் தேவனிடம் அடையாளம் கேட்பதற்கான காரணமாக உள்ளது (மத்.12:38, 1கொரி.1:22-23). கிதியோன் விசுவாச வீரர்களின் பட்டியலில் இருக்கின்றான் (எபி.11:32). ஆனால் ஆரம்பத்தில் இவனும் விசுவாசத்தில் குறைவுள்ளவனாகவே இருந்துள்ளான். தேவன் அவனை அழைத்த போதே அவன் கேட்டபடி ஒரு அடையாளத்தைக் கொடுத்திருந்தார் (6:17-21). அதன் பின்னர் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார். அப்படியிருந்தும் அவன் பயந்த சுபாவமுள்ளவனாக இருந்தமையால் விசுவாசக் குறைவுடன் அடையாளம் கேட்டான். இதனால், தேவனும் கிருபைமிக்கவராக அவன் கேட்ட விதமாகச் செயற்பட்டு, அவன் செய்ய வேண்டிய பணியை அவனுக்கு உறுதிப்படுத்தினார். தேவன் குறிப்பிட்ட ஒரு பணிக்காக ஒருவனைத் தெரிவு செய்யும்போது அவன் அதைக் கட்டாயம் செய்ய வேண்டியவனாக இருக்கின்றான். இதற்காகத் தேவனும் தாம் தெரிந்துகொண்ட மனிதனுடைய பலவீனங்கள் விசுவாசக் குறைவுகளுக்கு மத்தியிலும் அவனை உபயோகிக்கிறவராக இருக்கின்றார் என்பதற்குக் கிதியோன் சிறந்த உதாரணமாக இருக்கின்றான்.

மீதியானியர் மீதான வெற்றி மானிட பலத்தில் அல்ல தேவனுடைய வல்லமையிலேயே முழுமையாக உள்ளது என்பதைக் காண்பிப்பதற்காகத் தேவன் கிதியோனுடைய படையினரின் எண்ணிக்கையைக் குறைத்தார். கிதியோனிடம் 32000 படையினர் இருந்தனர் (7:3). மீதியானியரில் 135000 பேர் இருந்தனர் (8:10). எனவே யுத்தத்தின் வெற்றி இஸ்ரவேல் மக்களுக்குப் பெருமையை ஏற்படுத்திவிடும் என்பதனால், தேவன் படையினரின் எண்ணிக்கையை 300 ஆகக் குறைத்தார். எண்ணிக்கை வெற்றிக்கு ஆதாரம் அல்ல. ஆரம்பத்தில் உபாகமம் 20:8ன்படி பயந்த சுபாவமுள்ளவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர் (7:1-3). அதன்பின்னர், அசிரத்தையாயிருந்தவர்கள் திருப்பியனுப்பப் பட்டனர். நின்றுகொண்டு குனிந்து தண்ணீரைக் கையிலெடுத்து நக்கிக் குடித்தவர்கள் எப்பொழுதும் யுத்தத்தைப் பற்றிய அவதானத்துடன் இருந்தனர். இத்தகைய 300 பேரைத்தவிர ஏனையவர்கள் யுத்த சூழலைப்பற்றிய சிந்தனையற்றவர்களாக முழுங்கால் ஊன்றித் தண்ணீர் குடித்ததினால் திருப்பி அனுப்பப்பட்டனர். எதிரிகள்


©. M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, November, 2006.

தாக்கத் தொடங்கினால் இவர்களினால் உடனடியாக தப்பியோடமுடியாது. 6ம் வசனம் 5ம் வசனத்திற்கான விளக்கமாக உள்ளது.

கிதியோன் பயந்த சுபாவமுள்ளவனாக இருந்ததினால் தேவன் அவனுக்குத் துணையாக வேலைக்காரனையும் அவனுடன் அனுப்பினார் (7:9-11). எதிரியின் படையினரில் ஒருவன் கூறிய கனவின் மூலமும் கிதியோனின் பயம் நீக்கப்படுகிறது (7:11-15). எதிரிகள் ஒருவரையொருவர் தாக்கும் விதத்தில் தேவன் செயற்பட்டு கிதியோனுக்கு வெற்றியைக் கொடுத்தார் (7:16-25).

மீதியானியரின் மீதான வெற்றியைத் தொடர்ந்து அவனை மக்கள் ராஜாவாக்க முற்பட்டனர். அவன் இதை மறுத்துவிட்டாலும் (8:22-23) அதன்பின்னர் அவன் ஒரு ராஜாவைப் போலவே வாழ்ந்துள்ளான். இதனாலேயே அவனுக்குப் பல மனைவிகள் இருந்தனர் (8:30-31). மேலும், அவன் மக்களிடமிருந்த நகைளை வங்கி (42 றாத்தல் தங்கம்) அதை ஒரு விக்கிரகமாக்கி மக்கள் மறுபடியும் தேவனைவிட்டு வழிவிலகிச் செல்வதற்கு காரணமாயிருந்தான் (8:24-27). தேவனுடைய வல்லமையினால் செயற்படுகிறவர்கள், தேவனுடைய வார்த்தையின்படி செயற்படாமல் இருக்கும்போது, அவர்கள் மக்களைத் தவறான வழியில் வழிநடத்துகிறவர்களாகவே இருப்பார்கள் என்பதற்கு கிதியோனுடைய பிற்கால வாழ்க்கை சிறந்த விவரணமாக உள்ளது. ஏபோத் ஆசாரியர்கள் அணியும் ஆடைகளில் ஒன்று (யாத்.28: 6-30, 39:1-21, லேவி.8:7-8). ஆனால் கிதியோன் உருவாக்கிய தங்கத்தினாலான ஏபோத் ஒரு விக்கிரகமாகவே மாறிவிட்டது. தன்னை மக்கள் அரசனாக்க முற்பட்டதை மறுத்த கிதியோன் தன்னை ஒரு ஆசாரியனாக்கிக் கொண்டதாக வேத ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். 27ம் வசனம் அவன் தன்னுடைய ஊரில் ஒரு வழிபாட்டு ஸ்தலத்தை உருவாக்கியதைப் பற்றியே கூறுகிறது. இது ஆசரிப்புக் கூடார வழிபாட்டுக்கு எதிராக உருவாக்கப்பட்ட வழிபாட்டு முறையாக உள்ளது. அக்காலத்தில் சீலோ என்னுமிடத்திலேயே தேவனை வழிபடும் ஆசரிப்புக்கூடாரம் இருந்தது. மேலும் லேவி கோத்திரத்தைச் சோந்தவர்களே ஆசாரியர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். இதையெல்லாம் கருத்திற் கொள்ளாத நிலையில் கிதியோன் செயற்பட்டுள்ளான். கிதியோனுடைய வெற்றி காரணமாக 40 வருஷங்கள் நாட்டில் சமாதானம் நிலவினாலும், மக்கள் விக்கிரக வழிபாட்டுக்குள் மறுபடியும் செல்லும் விதத்திலேயே அவனுடைய நடவடிக்கைகள் இருந்துள்ளன. தேவனால் உபயோகிக்கப்படும் மக்கள் பிரபலமடைவதனால், மனிதர்கள் அவர்களைத் தங்களுடைய ராஜாவாகவும் தெய்வமாகவுமே கருதுகின்றனர். தேவன் தங்களுக்கு வெற்றியைக் கொடுத்தவர் என்பதை மறுக்கும்விதத்தில், கிதியோனே தங்களுக்கு வெற்றியைக் கொடுத்தான் என்னும் எண்ணத்தில் மக்கள் அவனை ராஜாவாக்க முற்பட்டனர். மேலும், யுத்தத்தில் வெற்றி கிதியோனினால் வந்தது என்னும் மக்களுடைய எண்ணத்தை மாற்றவும் அவன் முற்படவில்லை. தற்காலத்தில் இத்தகைய சோதனையிலிருந்து ஊழியர்கள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டியது அவசியம். இது மக்களைத் தவறான விதத்தில் வழிநடத்துவதற்கு ஏதுவாக அமையும் சோதனையாகவே உள்ளது.

9:1-57. கிதியோனின் மரணத்தின் பின் அவனுடைய மகன் அபிமெலேக்கு அவனுடைய 70 சகோதரரையும் கொன்றுவிட்டு, மக்களின் ஆதரவுடன் தன்னை சீகேமின் ராஜாவாக்கிக் கொண்டான். எனினும் மூன்று வருஷத்தின் பின்னர் தேவன் அவன் அழிந்துபோகும்படி செய்தார்.

10:1-5. கிதியோனுக்குப் பின்னர் தோலா, யாவீர் என்னும் இரு நியாயாதிபதிகள் முறையே 23 வருஷங்களும் 22 வருஷங்களும் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தனர்.

10:6-12:7. அம்மோனியருடைய ஆக்கிரமிப்பை மேற்கொள்ள தேவன் யெப்தா என்பவனை உபயோகித்தார். இவன் 6 வருஷங்கள் இஸ்ரவேலை நியாயம் விசாரித்தான். இவனைப்பற்றிய மேலதிக விளக்கத்திற்கு எனது "மகளையே பலியிட்ட மனிதன்" என்னும் நூலைப் பார்க்கவும்.

யெப்தாவின் சரிதையில் அவன் தன்னுடைய மகளைப் பலியிட்ட சம்பவம் அதிக சர்ச்சைக்குரியதாக உள்ளது. சில வேத ஆராய்ச்சியாளர்கள், யெப்தா தன் மகளைப் பலியிடவில்லை என்றும், அவன் அவளை ஆலயத்தில் பணிவிடை செய்வதற்காக அர்ப்பணித்தான் என்றும் கூறுகின்றனர். ஆனால், யுத்தத்தில் தான் வெற்றியோடு திரும்பி வந்தால், தன் வீட்டு வாசற்படியிலிருந்து தனக்கு எதிர்கொண்டு வருவது


©. M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, November, 2006.

எதுவோ, அது கர்த்தருக்கு உரியதாகும். அதைச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்துவேன் என்று சொன்ன யெப்தா (11:31), அவன் பண்ணியிருந்த தன் பொருத்தனையின்படியே அவளுக்குச் செய்தான் (11:39). அவனுடைய பொருத்தனை தனக்கு எதிர்கொண்டு வருவதைத் தகனபலியாகச் செலுத்துவது. எனவே, அவன் தன் பொருத்தனையின்படியே அவளுக்குச் செய்தான் என்பது, அவன் அவளைத் தகன பலியாகச் செலுத்தினான் என்னும் அர்த்தத்துடனேயே உள்ளது. நரபலி செலுத்துவது இஸ்ரவேலில் தடை செய்யப்பட்டிருந்ததினால், யெப்தா தன் மகளைப் பலியாகச் செலுத்தியிருக்க முடியாது என்னும் தர்க்கம் அர்த்தமற்றது. நரபலியைத் தேவன் தடை செய்திருந்தது உண்மை என்றாலும் (லேவி.18:21, 20:2-5, உபா.12:31), நியாயாதிபதிகளின் காலத்தில் எவரும் தேவனுடைய நியாயப்பிரமாணத்தைக் கைக் கொண்டு வாழவில்லை (17:6, 181, 19:1, 21:25). மேலும், யெப்தாவின் தாய் கானானியப் பெண்ணாக இருந்ததோடு, அவன் தாயுடனும் வீணரான மனிதருடனுமே வாழ்ந்து வந்தான் (11:1-3). இதனால் கானானியர்களுடைய பழக்கத்தின்படி அவன் தன் மகளைப் பலியாகச் செலுத்தியுள்ளான். அக்காலத்தில் இஸ்ரவேல் மக்களும் நரபலி செலுத்தப்படும் தெய்வங்களை வழிபட்டு வந்தனர் (10:6). மோவாபிய அம்மோனிய தெய்வ வழிபாட்டில் இத்தகைய பழக்கம் இருந்தது (2ராஜா.3:27). எனவே பாதிக் கானானியனாக இருந்த யெப்தா நரபலி செலுத்தியிருக்க மாட்டான் என்று கூறமுடியாது.

12:8-15. யெப்தாவுக்குப் பின் இப்சான் 7 வருஷங்களும், ஏலோன் 10 வருஷங்களும், அப்தோன் 8 வருஷங்களும் இஸ்ரவேலில் நியாயாதிபதிகளாக இருந்துள்ளனர்.

13:1-16:31. நியாயாதிபதிகள் புத்தகத்தில் இடம்பெறும் கடைசி நியாயாதிபதி சிம்சோன். இவனைப் பற்றிய விபரங்களுக்கு எனது “விபரீதமான வீரன்” என்னும் நூலைப் பார்க்கவும்.

சிம்சோனின் சரிதையில், சிம்சோன் பெலிஸ்தியப் பெண்ணைத் திருமணம் முடிக்க முற்பட்டது கர்த்தருடைய செயலாகக் குறிப்பிடப்பட்டுள்ளது அநேகருக்கு குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது (14:4). ஆனால் 4ம் வசனம் அடைப்புக்குறிக்குள் எழுதப்பட்டுள்ளது. (ஆங்கில வேதாகமத்தைப் பார்க்கவும்). மேலும், இது நியாயாதிபதிகளின் புத்தகத் தைத் தொகுத்து வெளியிட்டவர், சிம்சோனின் திருமணத்தைத் தேவன் எவ்வாறு தன்னுடைய நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக உபயோகித்துள்ளார் என்பதை அறியத்தருவதற்காக எழுதிய குறிப்பாகவே உள்ளது. சிம்சோன் நியாயப்பிரமாணக் கட்டளையை மீறி (உபா.7:1-3), தேவனை அறியாத பெண்ணைத் திருமணம் முடித்தது தவறல்ல என்று இவ்வசனம் கூறவில்லை. மாறாக சிம்சோனின் திருமணம் எவ்வாறு தேவனால் அவருடைய சித்தம் நிறைவேற உபயோகிக்கப்பட்டது என்பதையே அறியத்தருகின்றது. மானிட தவறுகளையும் தேவன் தமது நோக்கம் நிறைவேற உபயோகிப்பதை இயேசுகிறிஸ்துவின் சிலுவை மரணத்திலும் நாம் காணலாம். பெலிஸ்தரிடமிருந்து இஸ்ரவேல் மக்களை விடுவிக்கும் பணியை ஆரம்பிப்பதற்காகத் தேவனால் ஏற்படுத்தப்பட்ட சிம்சோன் (13:5), பெலிஸ்தரின்மீது குற்றம்பிடித்து அவர்களைத் தாக்குவதற்கு அவனுடைய திருமணம் நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்ததினால், தேவன் அச்சந்தர்ப்பத்தை உபயோகித்தார். இதைப் பற்றியே 4ம் வசனம் கூறுகிறது.

## நியாயாதிபதிகளின் காலத்தின் நிலைமை (17-21)

புத்தகத்தின் இறுதி அதிகாரங்களில் நியாயாதிபதிகளின் காலத்தில் இஸ்ரவேல் நாட்டின் நிலைமை எப்படி இருந்தது என்பது வர்ணிக்கப்பட்டுள்ளது. அக்காலத்தில் மக்கள் தத்தமது விருப்பத்தின்படியே வாழ்ந்துள்ளனர் என்பது இப்பகுதியில் பல தடவைகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன (17:6, 18:1, 19:1, 21:25). அக்காலத்தில் விக்கிரக வழிபாடு (17-18), ஒழுக்கக்கேடு (19), உறுதியற்ற குழப்பமான அரசியல் நிலை (20-21) இஸ்ரவேலில் காணப்பட்டது. இஸ்ரவேல் மக்களுடைய கோத்திரங்களுக்கிடையில் யுத்தமும், அழிவும் ஏற்பட்டுள்ளதையும் நாம் காணலாம்.

எபிரேயருக்கு எழுதப்பட்ட நிருபத்தில் நியாயாதிபதிகளும் விசுவாச வீரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளமையால், தற்கால கிறிஸ்தவர்களுக்கு உதாரணமாக உள்ள வீரர்களாக நியாயாதிபதிகள் இருப்பதாகப் பொதுவாகக் கருதப்படுகின்றது. ஆனால்,


©. M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, November, 2006.

பெரும்பாலான நியாயாதிபதிகள் கிறிஸ்தவர்களாகிய நாம் பின்பற்றக்கூடாத குணங்களையும், நடத்தை முறையையும் கொண்டுள்ளனர். இதனால், இப்புத்தகம் தற்காலக் கிறிஸ்தவர்களுக்கு கற்பிப்பது யாது என்னும் கேள்வி வேத ஆராய்ச்சியாளர்கள் மத்தியில் உள்ளது. நியாயாதிபதிகளின் கால நிலைமை தற்கால கிறிஸ்தவ சபைகளின் நிலையைச் சித்தரிக்கும் விவரணமாக இருப்பதை இவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளாமல், கானானிய மக்களுடைய வழிபாடுகளில் ஈடுபட்ட இஸ்ரவேல் மக்களைப் போலவே, தற்கால கிறிஸ்தவ உலகமும் தேவனுடைய கட்டளைகளை மறந்து, பிறமதக் கருத்துக்களையும் சிந்தனைகளையும் வழிபாட்டு முறைகளையும் கிறிஸ்தவத்திற்குள் புகுத்தி பின்மாற்ற நிலையில் உள்ளது. ஆவிக்குரிய வாழ்வின் முக்கியத்துவத்தைக் கருத்திற்கொள்ளாமல், வெறும் உலகரீதியான பொருளாதார ஆசீர்வாதங்களின் பக்கம் ஈர்க்கப்பட்டுள்ள தற்கால கிறிஸ்தவர்கள், நியாயாதிபதிகள் கால இஸ்ரவேல் மக்களைப்போலவே உள்ளனர். போட்டியும், பொறாமையும், பிரிவினைகளும், உலகத்தோடு ஒன்றித்துவிட்ட வாழ்க்கை முறையும், அன்பற்ற தன்மையும், தற்கால கிறிஸ்தவ உலகில் நாம் காணும் சிறப்பம்சங்களாக உள்ளன. நியாயாதிபதிகள் காலத்தைப்போலவே மக்கள் தேவனுடைய வார்த்தையை மறந்து, அவனவன் தன்தன் பார்வைக்கு நலமானபடி வாழ்வதும், வேதாகமத்தை வியாக்கியானம் செய்வதும் வாடிக்கையாகிவிட்டது. இதனால் கிறிஸ்தவம் குழப்பமான நிலையிலும், பிறமதத்தவர் மத்தியில் சாட்சியற்ற நிலையிலும் உள்ளது.

மனிதர்கள் தேவனை மறந்து பின்வாங்கிப்போனாலும், தேவன் கிருபையுள்ளவரும் தமது வாக்குத்தத்தத்திற்கு உண்மையுள்ளவருமாக இருப்பதையும் நியாயாதிபதிகளின் புத்தகம் அறியத்தருகின்றது. மக்கள் மனந்திரும்பி தேவனிடம் அவரும்போது, அவர் அவர்களை விடுவிப்பதற்காக நியாயாதிபதிகளை எழுப்பி, அவர்களை எதிரிகளின் ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்தார். இதேவிதமாக நாமும், நமது பாவங்களைவிட்டு, தேவனிடமாய் மனந்திரும்பி வரும்போது அவர் நம்மையும் மன்னித்து ஏற்றுக் கொள்கிறவராக இருக்கின்றார் என்பதை இப்புத்தகம் அறியத்தருகின்றது.


©. M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, November, 2006.

# Israel's oppressors in the days of the judges






©. M.S.Vasanthakumar, Tamil Bible Research Centre, November, 2006.